திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள்
செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை



ஸ்ரீ குமரகுருபர முனிவர் வரலாற்றுப் படங்கள்

ப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளக் கருத்தின்படி

சென்னை, 'கலைமகள்' ஆசிரியர் வித்துவான்
திரு. கி. வா. ஜகந்நாதையர் B.O.L., அவர்களால்
வெளியிடப்பெற்றது.


1949

ஸ்ரீ குமரகுருபர முனிவர் வரலாறு

தென்பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டத்தைச் சார்ந்த கைலாசபுரத்தில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரியம்மையாருக்கும் திருக்குமாரராக ஸ்ரீகுமர குருபரர் உதித்தார். மழலை மொழி பேசிப் பெற்றோருக்கு இன்பம் வழங்காமல் ஐந்தாண்டுவரையில் ஊமையாக இருந்தார். அதுகண்டு வருந்திய தாய் தந்தையர் குழந்தையைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று செந்திலாண்டவன் திருமுன்னே கிடந்தி விரதம் இருந்தனர். முருகன் திருவருளால் குழந்தை வாய் திறந்து பேசத் தொடங்கியது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அப்பொழுதே 'கந்தர்கலி வெண்பா'வைப் பாடினார்.

அறிவும் அழகும் சிவஞானமும் வளர வளர்ந்த ஸ்ரீ குமரகுருபரர் தல யாத்திரை செய்யத் தொடங்கி மதுரையை அடைந்தார். அங்கே மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடி, திருமலைநாயக்கன் முன் அரங்கேற்றினார். அரங்கேற்றுகையில் மீனாட்சியம்மையே இளம்பெண்ணாக வந்து மன்னன் துடையில் அமர்ந்து கேட்டருளினாள். "காலத்தொடு கற்பனை கடந்த" என்ற அருமைச் செய்யுளை அரங்கேற்றும்போது, அம்மை மனமுவந்து ஸ்ரீ குமரகுருபரருக்கு ஒரு முத்து மாலையை அணிந்து மறைந்தருளினாள். அப்பால் மதுரைக் கலம்பகம் பாடினார். இளமையில் முதிர்ந்த புலமைபெற்ற அவரது பெருமையை அறிந்து வியந்த மன்னன் அவரைச் சிவிகையில் ஏற்றி நகர்வலம் செய்வித்து மகிழ்ந்தான்.


ஸ்ரீ குமரகுருபரர் அப்பால் திருவாரூர் சென்று தரிசித்துத் திருவாரூர் நான்மணிமாலை பாடினார். சிவஞான உபதேசம் பெறும் ஆர்வம் மிக்குத் தருமபுரம் சென்று அங்கே ஆதீனக் குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வணங்கி வழிபட்டார். ஞான தேசிகருடைய கட்டளைப்படியே புள்ளிருக்கு வேளூர் சென்று தரிசித்து முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் பாடினார். பிறகு சிதம்பரம் சென்று பஞ்ச கிருத்தியத் திருநடனம் தரிசித்துச் சிலநாள் அங்கே தங்கினார். அப்போது சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, நீதி நெறி விளக்கம் என்ற அரிய நூல்களைப் பாடினார்



செந்திலாண்டவன் திருக்கோயில் திருச்செந்தூர்
(திருநெல்வேலி ஜில்லா.)




ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த கைலாசபுரத்தில் சண்முகச்சிகாமணி
கவிராயருக்கும் சிவகாம சுந்தரியம்மையாருக்கும்
புதல்வராகக் குமரகுருபரர் உதித்தார்.




ஐந்தாண்டுவரையில் ஊமையாகயிருந்து செந்திலாண்டவன்
திருவருளால் வாக்குப்பெற்று கந்தர் கலிவெண்பாவைப் பாடினர்.




மதுரை சென்று மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் இயற்றித் திருமலை
நாயக்கர் முன்னே அரங்கேற்றும்போது அம்மையே
சிறு பெண்ணாக வந்து கேட்டருளினாள்.



"காலத்தொடு கற்பனை கடந்த" என்ற பாடலுக்கு உரை விரிக்கும்போது அம்மை குமரகுருபரருக்கு ஒரு முத்துமாலையையணிந்து மறைந்தருளினாள்.




இப்புலவர் பிரானது தெய்விகப்புலமையை வியந்து நாயக்க
மன்னன் அவரைச் சிவிகையில் ஏற்றி நகர்வலம் செய்வித்தான்.




தலையாத்திரை செய்யத் தொடங்கிய இத்தெய்வப் பாவலர்
திருவாரூர் சென்று தரிசனம் செய்து திருவாரூர்
நான்மணிமாலை பாடினார்.



தருமபுரம் சென்று ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டு அவர் கட்டளைப்படி தலயாத்திரைத் தொடங்கி வைத்தீசுவரன் கோயிலுக்கு வந்து தரிசித்து முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடுகிறார்.



அப்பால் சிதம்பரம் சென்று ஆனந்த தாண்டவமூர்த்தியைத்
தரிசித்து இன்புற்றுச் சிதம்பர மும்மணிக் கோவை,
சிதம்பரச் செய்யுட் கோவை, நீதிநெறி விளக்கம்
என்பவற்றைப் பாடினர்.



மீண்டும் தருமையாதீனம் வந்து ஸ்ரீ மாசிலாமணி தேசிகர்
பால் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டு, திருப்பெருகு சிவஞானமும்
உவமையிலாக் கலைஞானமும் உணரப்பெற்ற முனிவர் ஆனார்.




காசியில் உள்ள மொகலாய மன்னனோடு உரையாட விரும்பிய
முனிவர் சகல கலாவல்லியைப் பாமாலை பாடித் துதித்து
ஹிந்துஸ்தானியிலே புலமை பெற்றார்.




பின் ஒரு சிங்கமுதுகின் மேற்கொண்டு பாதுஷாவின் முன் சென்று அவருடைய வணக்கத்தையும் பாராட்டையும் பெற்ருர்.




பாதுஷா, முனிவர் விருப்பப்படி கருடன் வட்டமிட்ட இடத்தை மடம் அமைத்துக்கொள்ளும்படி அளித்தார்.



காசியில் கங்கைக் கரையில் கேதார நாதர். ஆலயமும்,
கேதார கட்டமும் கீறுவினர்.



கேதார்கட்டத்தில் குமரகுருபர முனிவர் கட்டிய மடம் இன்றும் குமாரசாமி மடம் என்ற பெயரோடு நிலவுகின்றது.



குமரகுருபர முனிவர் வழிவந்த தில்லைநாயகத் தம்பிரான் அவர்கள் திருப்பனந்தாளில் ஒரு மடத்தை நிறுவினர். அது காசிமடம் என்ற பெயரோடு சிறப்புடன் விளங்கி வருகின்றது.

மீண்டும் தருமபுர ஆதீனம் அடைந்து ஆசிரியப்பிரானை வணங்கினார். அப் பெரியார்பால் துறவும் ஞானோபதேசமும் பெற்று, பண்டார மும்மணிக்கோவை இயற்றினார்.

சைவத் தவவேடம் பூண்ட முனிவராக விளங்கிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசியை நோக்கிச் சென்றார். அங்கே சைவத்தைப் பரப்ப எண்ணிய முனிவர் முதலில் அந் நகரிலிருந்த மொகலாய மன்னரைப் பார்க்க எண்ணினார். சகலாவல்லி மாலை பாடிக் கலைமகளின் அருளால் ஹிந்துஸ்தானியில் நன்றாகப் பேசும் திறமை பெற்றார். பின் ஒரு சிங்கத்தின்மேல் ஊர்ந்து மன்னனுக்கு முன் சென்று உரையாடினார். முனிவருடைய பெருமையை உணர்ந்து மொகலாய மன்னன் அவரை வணங்கி அவர் விருப்பப்படியே உபய கருடன் வட்டமிட்ட இடத்தை வழங்கினான். அவ்விடத்தில் கேதார நாரதர் திருக்கோயிலையும் கேதார கட்டத்தையும் அமைத்து அருகே ஒரு திருமடத்தையும் கட்டுவித்தார் முனிவர். அந்த மடம் இன்றும் 'குமாரசாமி மடம்' என்ற பெயரோடு விளங்குகிறது. அங்கிருந்து காசிக்கலம்பகம் என்ற பிரபந்தத்தை இயற்றியதோடு, சிவபுராணப் பிரசங்கமும், இராமாயணப் பிரசங்கமும் செய்து வந்தார். ஹிந்தியில் ராமாயணம் இயற்றிய துளசிதாசர்கூட அம் முனிவரது பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்தார்.

குமரகுருபர முனிவருடைய வழியில் பல பெரியோர்கள் காசியில் அறம் வளர்த்துவந்தார்கள். அவர்களுள் ஒருவராகிய தில்லைநாயக சுவாமிகள் திருப்பனந்தாளில் ஒரு மடாலயத்தைக் கட்டி அங்கும் காசியிலுமாக இருந்து வரலாயினர். அந்த மடமே திருப்பனந்தாளில் உள்ள ஸ்ரீ காசிமடமாகும்.

ஸ்ரீ காசிமடத் தலைவர்களாகப் பல பெரியோர்கள் சைவசமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் அறங்களும் வழிவழி புரிந்து விளங்கிவருகிறார்கள்.